# சுழிபுரம் - பறுளாய்
# ஏஸ்வர வினாயகர் - ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி
# ஆலயங்களின் புதிய சித்திரத் தேர் மலர்



Donated by
Mr. K. C.


மெய்கண்டான் அன்பளிப்பு

University of Jaffna
235.5
CUL
250273(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA LIBRARY
2001
2355
CUL
AR
266
CUL AR.



புதிய சித்திரத் தேரினில் ஷண்முகப் பெருமான்
ஆரோகணித்து முதல் விதியுலா வர ஆயத்தமாகும் காட்சி

ARCHIVES
250273
University of Jaffna
250273
Library
250273
UNIVERSITY OF JAFFNA LIBRARY
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சிவசுப்பிரமணிய வேளே!
# தேரில் உலாவருகவே!

சித்திரச் சிற்பக் கலையின் திறம்மிளிரும்
அற்புதத் தேரில் அமர்ந்தருளிப் — பத்தரெலாம்
சூழப் பருளாய்ச் சிவசுப் பிரமணிய
வேளே உலாவருகவே.

பொன்விளையும் பூமியெனப் போற்றும் பருளாயின்
இன்னமுதே! தேனே! எழிற்சுடரே!— எம்மருமைப்
பொன்னே! புதுத்தேர் பொலிய இவர்ந்தருளி
இன்னே உலாவருகுவீர்.

நேராரின் முப்புரங்கள் நீருக்கத் தந்தையார்
தேரேறி ஞர்முன் சிவபாலா .... சீராளர்
மும்மலமும் வேரறுத்து முத்திதர நீரிந்த
நன்மணித்தேர் ஊர்வீர் நயந்து.

ஊர்பேர் உருநிறம் ஒன்றும் இலானெனினும்
ஆர்வலருக் காக அவைதாங்கிச் — சீர்பொலியும்
தெய்வப் பருளாயான் தேரிவர்ந்தான் யாமெல்லாம்
உய்ய அருளால் உவந்து

தந்தையாய் அன்னையாய்ச் சற்குருவாய்ச் சர்வமுமாய்
வந்து பருளாய் வதியுமெங்கள் — கந்தர்
திருத்தேரி லூற்ற திருக்கோலங் கண்டார்
அருட்பே றெலாமெய்து வார்.

பண்டிதர் அ. ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்டரும் ஏத்திட ஐயாநீ வாராய்

(1) மங்களங்கள் பொங்குகின்ற சுழிபுரமாம் பதியில்
மாதிரம் அனைத்தும்நற் களனிபல வோங்கும்
திங்களணி செஞ்சடையோன் சிறிளமை மைந்தன்
செவ்வேல்தான் உறைகின்ற பதிபருளை யன்றோ
நங்கையரும் நம்பியரும் நாடிவரு நல்லோன்
நானிலத்தோர் துயர்தீர்க்கும் நயனுடைய வல்லோன்
எங்களது கண்குளிர மனம்குளிரச் செய்யும்
எழிலார்ந்த இளமுருகன் வீதியுளா பாரீர்

(2) தேரொலியோ டேரினது சிற்றொலியு மொன்றிச்
சிங்கார வேலவனின் திருப்புகழைக் கூறும்
பாரிலுளோர் துயர்துடைக்கப் பரந்தாமன் மருகன்
பன்னிருகண் கருணைமழை பாங்காகப் பொழியும்
காரினது வரவுகண்ட மயில்கலென நாமும்
காவடிகள் ஆடிடுவோம் பாடிடுவோம் வாரீர்
தாரையொடு தப்பட்டை சங்கெல்லா முழங்கத்
தமிழ்முருகன் புதுத்தேரில் தாவிவரு கின்றான்

(3) எங்கள்குல விளக்கொளியே இனிதெழுந்து வாராய்
ஏழுலகும் வினைதீர்ந்து ஏற்றமுறச் செய்வாய்
பங்கமுறு அருளுடைய பன்னிருகைக் குமரா
பாவியரைக் கடைத்தேற்றும் பெரும்புணையே அப்பா
சங்கமதில் தமிழாய்ந்த கீரனுக்கு அருளித்
தகவான திருமுருகா பாடுவித்த செல்வா
பொங்கிவரு மன்போடு நாமுன்னை அணைந்தோம்
புண்ணியனே எம்மையென்றும் காத்தருள்வாய் நீயே

(4) தண்டையொடு கிண்கிண்ணி சிலம்புமொலி செய்ய
தாரணிந்து தேர்மீது வீதிவரு கின்றாய்
பண்டைவினை தீர்ந்தின்று பாவியரு முய்ந்தோம்
பாலகனே பக்தருக்கு அருள்நோக்கம் செய்வீர்
புண்டரிகம் எனவுனது முகப்பொழிவு பொங்கப்
புண்ணியக்கை பன்னிரண்டும் பூதலத்தைக் காக்க
அண்டருல குள்ளோரும் ஆறுமுகா என்ன
அரோகரா அரோகரா ஐயாநீ வாராய்

பண்டிதை பொன் பாக்கியம்
ஆசிரியை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# முருகன் பெருமைப் பத்து

1. அருமருந்தே! அமுதவூற்றே! அன்பே! தேனே!
ஆனந்தப் பெருங்கடலே! அளவுக் கெட்டாப்
பெருவிருந்தாய் அடியார்தமைப் பேணிக் காக்கும்
பெம்மானே! பிறைசூடும் பிரானார் தந்த
தருவனைய தவக்கொழுந்தே! தமிழர்தம் கதியே!
தந்திமுகன் தம்பியாக வந்த தலைவ!
கருதரிய பவக்கடலைக் கடக்கச் சிவமாய்க்
காத்தருளும் திருமுருகா! போற்றி போற்றி

2. அகத்தியர்க்குக் குருவாகி அருளைச் செய்தாய்!
அருணகிரிக் கன்பருளி ஆண்டு கொண்டாய்
சகத்திலுயர் மாந்தரெலாம் வாழ்வ தற்காய்ச்
சண்முகனே! பலவாடல் காட்டி நின்றாய்!
மகத்துவமாய்ச் சூரர்தம் மயக்கைப் போக்கி
மாதாபிதா மகிழ்ச்சிகொள மயிலுங் கொண்டாய்!
செகத்திலுனைப் போலொருவர் உண்டோ ஐயா!
தேரேறி வருமுருகா! செப்பு வாயே!

3. எங்கெங்கே தமிழர்கள் வாழ்கின் றாரோ
அங்கங்கே நீசென்று ஆடல் செய்வாய்
மங்காத மயிலேறி விளையாடு குமரா!
மால்மருகா! வள்ளிதெய்வ மணாளா! என்றும்
தெங்குமலி சோலைமயில ஆடல் காணும்
தேவாதி தேசிகனே; குயில்கள் பாடச்
சங்குமலி களனிவயற் பதியை மேவும்
சடாற்சரநற் சண்முகனே! சரணம் ஐய!

4. தூங்காதே தூங்குகின்ற ஞானி கட்கும்
தூயசிவ ஞானவொளி காட்டுந் தேவே!
ஓங்காரப் பிரணவத்தின் பொருளைக் கேட்டே
ஒப்பரிய பிரமனையும் உணர வைத்தோய்!
பாங்காக வள்ளிதெய்வ யானை யோடு
பதியையுறை பரஞ்சுடரே! ஞாலத் துள்ளோர்
தாங்கரிய பிறவிநோய் நீங்க இன்பம்
தந்துதவும் சிவசுப்ர மண்ய! வாழி

5. மாறுபடு சூரர்தமை மடித்தோய் நீயே!
மயிலேறி உலகவலம் வந்தோய் நீயே!
ஆறுதலைத் தருதற்காய் ஆறுமுக மானாய்!
அஞ்சுதற்கும் கெஞ்சுதற்கும் இடமில்லை யென்போய்!
வீறுதரு வீரமுடன் கல்வி ஞானம்
விளங்குசெல்வம் துலங்கியென்றும் மக்கள் வாழ
நீறுதிதழ் அடியர்துயர் பொடியே யாக
நிமலனருள் திருப்புதல்வா! அருளல் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கந்தா! நின் மலரடியைச் சிந்தை செய்யின்
கல்வியொடு செல்வமும்! ஞானம் ஓங்கும்!
நந்தாத புகழோடி வந்தே சேரும்
நாட்டிய நற்பேறு யாவும் மேவும்!
செந்தாது மலிகின்ற மலர்கள் தோன்றும்
சிவமான தடாகஞ்சேர் பருளை மேவும்!
சிந்தாத மணியனைய சிவக்கொ முந்தே
சிவசுப்ர மணியவெனும் தேனே! போற்றி

7. எத்தனையோ தெய்வங்கள் உலகில் உண்டு
எளிதாக வந்துதினம் வழியைக் காட்டும்
சத்தான தெய்வம்வே றுலகில் உண்டோ!
சாந்தத்தின் தனிவடிவே! சால்பு மிக்க
பக்தர்களைப் பரவசத்தில் ஆழ்த்து கின்றாய்'
பருளைதனில் வீற்றிருந்து காட்டு கின்ற
வித்தைக்கோர் அளிவில்லை விக்னம் போக்கும்
விநாயகனின் விளையாட்டிற் களிக்கின்றனே

8. அன்பருளம் வாடுதற்கோ ஆறுமுக மானாய்!
அடியருளம் விடுதற்கோ ஆறிருகை யானாய்!
இன்பமுடன் இல்வுலகில் எல்லோரும் வாழ
இனியமுகம் பன்னிருகை இருக்கின்ற போது
துன்பமெலாம் நீக்கியறம் எங்கெங்கும் ஓங்கத்
துணைபுரிய வேண்டுமெங்கள் பன்னிருகை வேலா!
கன்மமலம் கடிதேகிச் சென்மங்கள் வாழ்க
காத்தருள்வாய் கந்தனெனும் கனிந்த பெருமானே!

9. சண்முகனைச் சரணடைந்தால் சஞ்சலமும் உண்டோ!
சாந்தியொடு சமாதானமும் ஓங்கிவரு மன்றோ!
அண்டிவரும் பகையெல்லாம் அன்புருவ மாகும்
ஆனந்தம் அவனிமிசை அருளாட்சி செய்யும்
பண்டிதரும் பாமரரும் பணிந்தேத்தும் எங்கள்
பருளையுறை பரஞ்சுடரே! பணிவோர்க் கென்றும்
தொண்டருளம் களிகொள்ளத் துணைசெயும் முருகா!
தூயோரைத் தொண்டராக்கும் சுடர்மணியே! போற்றி

10. அலைகடலாய்த் தத்தளிக்கும் ஆன்ம வர்க்கம்!
அன்பறிவு ஆற்றலுடன் நீடு வாழ்க!
கலைகளெலாம் நிலைகொள்ளக் காட்சி நல்கும்
கடவுளடித் தொண்டர்தம் பணிகள் வாழ்க!
திலகமான திருமுருகா, நின்னடி பரவும்
திசை போற்றம் அடியார்கள் தினமும் வாழ்க
நிலவுலகம் நீடூழி நிலைத்து வாழ்க
நீலமயில் வாகனநின் கருணை வேண்டும்.

சித்தாந்த கலாநிதி
க. கணபதிப்பிள்ளை பி ஏ.

28-04-85

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருளாயம் பதி அழகன் ஆறுமுகன்
கொலு விற்றிருக்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட அமைச்சு
அரசாங்க செயலகம்
யாழ்ப்பாணம்

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

# ஆசியுரை

''கலியுகம்!'' என்று கூறப்படுகின்ற இன்றைய காலகட்டத்திற்குரிய தெய்வீய சக்தி ''முருகன்'' என்பது ஆன்றோர் கண்ட உண்மையாகும். எமது உடலமைப்புக்கும் ''முருகன்'' என்ற தத்துவத்திற்கும் நிறைய ஒற்றுமை இருப்பதினாலேயே முருகபக்தர்கள் நாட்டில் கூடுதலாகக் காணப்படுகின்றனர். இதற்கமைய, முருகன் ஆலயங்களும் அதிகம் உள்ளன. அதிகம், குறிப்பாக யாழ்ப்யாண மாவட்டத்தில் முருகன் ஆலயம் இல்லாத ஊரே கிடையாதெனக் கூறலாம். இவ்வாறான முருகன் ஆலயங்களுள் மிகதொன்மையான ஆலயம் சுழிபுரம்-பறுளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயமாகும். இவ்வாலயம் மக்களிடையே மிகவும் பிரபல்யமான ஒன்ருகுமென்பதோடு, நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகின்ற ஆலயமுமாகும். ஒரு ஆலயத்தில் கோபுரத்தைப்போன்று, இரதம் என்று அழைக்கப்படும், தேரும் மிகமுக்கியமானதாகும், பெருமை மிக்க இந்த ஆலயத்திற்கு ஒரு சித்திரத் தேரினை உருவாக்கி அதன் வெள்ளோட்டம் நடைபெறும் தினத்தன்று வெளிவருகிறது இம்மலர்.

ஆலய அபிவிருத்திச் சபையினர் மேற்கொள்ளும் இம்மலர் வெளியிடும் முயற்சிக்கு எனது பாராட்டினையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வை. மு. பஞ்சலிங்கம்**
யாழ் மாவட்டச் செயலாளரும்
யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருஆலவாய்"
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்!

" சிவனே முருகன் அவன் சிவசுப்பிரமணியன்
சிவபூமியாகிய இலங்கையில் மங்கலங்கள்
பொலியும் வடபாகத்தில், வரலாற்றுப்புகழ்
வாய்ந்த சுழிபுரம் - பறுளாய் பதியில்
எழுந்தருளியுள்ள ஸ்ரீ சிவசுப்பிரமணியப்
பெருமானுக்குச் சித்திரத்தேர் உருவாக்கிய
வைபவத்தைக் கொண்டாடும் வெள்ளோட்ட
விழா நினைவாக வெளிவரும் இம்மலருக்கும்
அபிவிருத்திச் சபையாருக்கும், அன்பர்கள்,
அடியார்கள் எல்லோருக்கும் எங்கள் உளங்கனிந்த
பாராட்டும் ஆசியும் உரித்தாகுக வாழ்க
சீரடியார் எல்லாம்,"

இங்ஙனம்
"சிவநெறிப்புரவலர்"
க. கனகராசா ஜே, பி.
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருமுருகன் துணை

# பிரார்த்தனை உரை

சுழிபுரம் - பறாளை
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி
எழுந்தருளுதலுக்கு
அமைந்த
புதிய சித்திரத் தேர்
வெள்ளோட்டம்
மிக்க சிறப்புடன்
நடைபெறுவதாக.

* * *

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியின்
திருவருள்
யாவர்க்கும் இட்ட சித்திகளை
வழங்குவதாக என்று
வேண்டுதல் செய்து
பிரார்த்திப்போமாக.

திருமுருகன் திருவருள் பெருகுக

கலாசாலை வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
01-05-1985

இலக்கிய கலாநிதி
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

எல்லாம் வல்ல முருகப் பெருமானின் கருணைக் கடாட்சத்தினால் பருளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் தேர்த் திருவிழா நடைபெறும் இன்றைய தினத்தில் இந்தத் தேர் மலர் வெளியிடுவதில் பெருவகை அடைகின்றோம்.

1975-ம் ஆண்டில் புதிய சித்திரத் தேர் ஒன்றினை அமைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் எமது தந்தையார் அமரர் நா. இரத்தினசபாபதி அவர்கள் தலைமையின் கீழ் பெரும் பிரயத்தனத்துடன் ஆரம்பமான தேர்த் திருப்பணிச் சபையின் நோக்கம் பத்து வருடங்களுக்குப் பின்னரே முருகன் திருவருளால் நிறைவேறியது.

1984-ம் ஆண்டில் இந்தப் புதிய தேர் உலா வரும் என சபையார் செற்பட்டு வெள்ளோட்ட விஞ்ஞாபனம் வெளிக்கொணர்ந்தும், குறிப்பிட்டபடி புதிய தேர் பவனி நடைபெறவில்லை.


"அவனருளாலே அவன் தாழ் வணங்கி" என்பதற்கமைய அவ்வருடம் தேரில் எம்பெருமான் எழுந்தருள அவன் திருவருள் கூடவில்லைப் போலும். மறு வருடமான 1985-ம் ஆண்டிலேயே வெள்ளோட்டமும் புதிய சித்திரத் தேர் பவனியும் நடைபெற்றது.

புதிய சித்திரத் தேரினை ஓட்டி மலரொன்றினை வெளியிடவேண்டுமென்ற வேணவா வெள்ளோட்ட நாட்களில் நோய்வாய்ப் பட்டிருந்த எமது தந்தையாருக்கு இருந்தது. எனினும், அவ்வேளையில் அது செயலுருவம் பெறவில்லை.

இவ்வருடம் தந்தையாரது வேணவாவினைப் பூர்த்தி செய்யவும் புதிய சித்திரத் தேரினை ஓட்டியும் இம்மலரினை வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

"மெய்கண்டான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் குலம் காக்க வருக வருகவே!

எங்கள் குல தெய்வமாம் பருளாய் முருகன் பவனி வரும் அருங்கலைப் பெருந் தேரின் சிறப்பு பல்லோராலும் போற்றப்பட்டது. 1975-ம் ஆண்டு நான் இத்திருத்தலத்தின் கும்பாபிஷேகத்துக்குச் சென்றிருந்த போது இதன் தொல் நிலையைக் கண்ணுற்று ஒரு புதிய தேர் செய்விக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனத்தில் தோன்றியது. இவ்வெண்ணத்துக்கு அந்த ஆண்டே உருக் கொடுத்து ஒரு சபையை நிறுவினேம். பத்து ஆண்டுகள் கழிந்து ஒரு சிறந்த சித்திரத் தேராக அமைய இத்திருப்பணியில் அயராது ஊக்கமுடன் உழைத்த அன்பர்கள், பெரியார்களுக்கு என் உளம் கனிந்த அன்பைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

"வண்ணத் தேரேறி வள்ளிமணாளா நீ
எங்கள் குலம்காக்க வருக வருகவே!"

நா. இரத்தினசபாபதி
தலைவர்,
சுழிபுரம் - பருளாய்
தேர் திருப்பணிச்சபை-1975

'மெய்கண்டான் இல்லம்'
கொழும்பு.
1-6-85

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் ஆசி உரை

ஈழமணித் திருநாட்டில் வடபால் அமைந்துள்ள பழம்பெரும் குடிகளில் சுழிரம் பதியும் ஒன்றாகும். இந்தியாவின் சோழியபுரத்தின் பரம்பரையினர் இவ்விடத்தில் குடியேறியதாக வரலாறு கூறுகிறது. இப்பதி தான் முருகக் கடவுள் சூரபன்மனை தென் இலங்கையில் போரில் வென்று தன் பரிவாரத்துடன் தங்கிய இடம் என நம்பப்படுகிறது.

இப்பருளாயம் பதியில் மிகத் தொன்மையும், வரலாற்றுப் பெருமையும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முற்சிறப்புக்களும் கொண்டது. இங்கு வீற்றிருக்கும் ஆனைமுகப் பெருமானுக்கும், ஆறுமுகப் பெருமானுக்கும் அயலயலாக அமைந்த கோவில்கள் பழமையும் பெருமையும் அற்புதச் சிறப்பும் வாய்ந்தவை. இவையிரண்டு ஸ்தலங்களுக்கும் பொதுவில் உரியதாக மிகுந்த சிற்பக் கலைவண்ணமும் தொன்மையும் வாய்ந்த சித்திரத் தேர் காலத்தை கடந்து இருந்தபடியால் இங்கு வழிபாடு செய்யும் அடியார்களும் அர்ச்சகர்களும் புதிய சித்திரத் தேர் செய்து பெருமானை அதில் எழுந்தருளச் செய்து தமது கண்ணும் மனமும் நிறைவு பெறுவதை விரும்பினார்கள். முருகன் பக்தர்கள் ஆதரவுடன், குறிப்பாக மெய்கண்டான் அதிபர் அமரர் நா. இரத்தினசபாபதி அவர்களுடைய பெரு முயற்சியால் அவரை தலைவராகக் கொண்டு 1975-ம் ஆண்டு தேர் திருப்பணிச் சபை ஆரம்பமாகிக் கொழும்பிலும் நிதியுதவி நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன. இப்பணியில் ஈடுபட்டிருக்கும் வேலையில் அடியார்கள் பக்தர்கள் அர்ச்சகர்கள் ஒன்று கூடி தேர் திருப்பணி மாத்திரம் அல்ல முருகப் பெருமானுக்கு இன்னும் ஏராளமான பணிகள் உதாரணமாக தீர்த்தக் கேணி, சித்திரத் தேர், தேர் வலம்வரும் வீதி, தேர் தரிப்பிடம் பல ஆண்டுகளுக்கு முன்பு விளங்கிய இராசகோபுரம், அர்ச்சகர்களுக்கு புதிய இல்லங்கள் பூந்தோட்டம், பஸ் போக்குவரத்து பாதை செய்ய இருப்பதால் 1980-ம் ஆண்டு சுழிபுரம் பருளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி அபிவிருத்திச் சபை என விரிவடையச் செய்தார்கள்.

தீர்த்தக்கேணி ஓர் அளவுக்கு அரசாங்கத்தின் நீர்பாசன இலாகாவினால் திருத்த வேலைகள் பூர்த்தியாகி இருந்ததால் எங்கள் சபை சித்திரத் தேர் உருவாக்கும் பெரும் பணியை திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய அதிபராம் சிற்ப கலாமணி சிற்பரத வித்தகர் சிற்பகேசரி போன்ற விருதுகள் பல பெற்ற திரு. ஆ. சீவரத்தினம் ஆச்சாரி அவர்களிடம் பொறுப்புக் கொடுத்து பொன்னுக்கும் பொருளுக்கும் உள்ளூர் சுழிபுரம் வாசிகளிடமும் சுழிபுரம் வாசிகளைச் சேர்ந்த பல்வேறு நாடுகளில் வசிக்கும் சுழிபுர மக்களிடமும் கடல் கடந்தும் முயற்சி எடுத்தனர். முருகப் பெருமானின் அனுக்கிரகத்தினாலும் அவன் அருளாலும் முருக பக்தர்கள் வாரிவாரி பொன்னும் பொருளும் மரமும் மணியும் வந்து குவிந்தன. எமது போஷகர் மெய்கண்டான் இரத்தினசபாபதி அவர்கள் பேருதவியாலும் இவ் அபிவிருத்திச் சபையினரின் செயற்குழு உறுப்பினர்களின் அயராத உழைப்பினாலும் இப்பெரும் பணி இனிது நிறைவுற்றது.

தேர் வெள்ளோட்டம் ஆரம்பமாகுமுன் திருவடி நிலையைச் சார்ந்த புளியந்துறைக் கடலில் பெரிய தேர்வடம் கற்பாரொன்றில் ஒதுங்கிக் கிடந்ததைக் கடற்றொழில் செய்யும் ஓர் முருக பக்தர் கண்டு அதனைத் தமது வள்ளத்தின் துணையோடு கரைக்குக் கொண்டு வந்து பருளாய் முருகன் சந்நிதானத்தில் சபையாரிடன் ஒப்புக்கொடுத்தார். இந்த அற்புதச் செய்தி வழிபாடு செய்யும் அடியார்கள் பலருக்குத் தெரியவந்ததும் அனைவரும் அப்பனின் கருணைத் திறத்தை வியந்து நெஞ்சம் நெக்குருகிக் கண்ணீர் வார்ந்து தோத்திரம் செய்தனர்.

இன்னும் மறு அபிவிருத்தி வேலைகள் பூர்த்தியாக எங்கள் சபையும் மலேயன் சங்கமும் திரட்டிய பணம் ஏறத்தாள ஐந்து இலட்சம் ரூபாவுக்கு சுழிபுரம் மலேயன் சங்கம் பொறுப்பேற்றிருக்கிறது.

எம் சபையின் செயற்பாடுகளை நோக்குமிடத்து முருகன் ஆலயத்தின் அபிவிருத்திகளோடு போதாமல் ஆலயத்தின் திருவிழாக்காலங்களிலும் கந்த சஷ்டி காலங்களிலும் சிறப்பு சொற்பொழிவுகளை ஏற்படுத்தியுமுள்ளோம்.

இதுரை நடைபெற்ற அபிவிருத்திகளுக்கு பேராதரவு நல்கிய பெருமக்களுக்கும் இனி மேல் எங்கள் சபையால் நடைபெற இருக்கும் அபிவிருத்திகளுக்கும் ஆதரவு நல்க இருக்கும் பக்தர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து முருகப் பெருமான் பேர் அருள் இவர்கள் யாவருக்கும் கிட்டுவதாக என்று வேண்டி நிற்கிறேன்.

ஆ. இராசபட்சம் B. Sc. (Cey.) M. I. C. E. (Lond.)
தலைவர், சுழிபுரம் பருளாய்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய
அபிவிருத்திசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

பருத்தித்துறை விதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

*இரண்டாவது குருமஹா சந்நிதானம் - ஆதீன முதல்வர்*

பேரன்புமிக்க சைவப் பெருமக்களே!

பருளை அருள்மிரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிக்கு ஓர் சித்திரத் தேர் அமைக்கப் பெற்றதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம். கலவரங்கள் நிறைந்த இக்கால கட்டத்தில் இக்கைங்கரியம் அளப்பரிய சாதனையாகும்- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு எம்மிடையே அசைக்க முடியாத ஒன்றிணைந்த, ஒற்றுமை, ஒருமைப்பாடு இன்றியமையா தென்பதற்கு இது எடுத்துக்காட்டாகும், அதுவுக் கலியுக வரதனும் முருகப் பெருமானுக்கு எடுத்த இத்திருப்பணி நாம் உய்வுபெற வகுத்த பெரு நெறியாகும் பிரபஞ்ச அமைப்பே தேர் வடிவம், அதன் அடித் தளத்தில் சிற்பங்களாகச் சித்தரிக்கப்பட்டிருப்பனவற்றை அவதானிப் போமானல், பிரபஞ்ச உற்பத்தி, மானுட வாழ்க்கையின் தொடக்கம்' முடிவு ஆதியனவற்றைக் குறிப்பனவாகும், எனவே இவ்வுலக வாழ்க்கை யைத் தேர்ந்து கொள் என்பதே தேர் ஜீவாத்மாவுக்கு, வேண்டியது, இறைவனை வேண்டியடைவது வீடுபேறு. இவை அடிப்படைத்தத்துவங்கள் இவ்வாலய அபிவிருத்திச் சபையார் இவ்விழாவை ஒட்டி ஓர் மலரினை வெளியிடுவது தனி பொருத்தமாகும். இக்கைங்கரியத்தை நிறைவுறச் செய்ய ஆக்கமும், ஊக்கமுமளித்து மற்றும் பல தொண்டுகள் ஆற்றிய அன்பர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம், உளமார எமது ஆசிகளை வழங்குகிறோம். ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய ஸ்வாமிகள்**

Donated by Mr. K C. ... RATNAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருளாய் முருகன் பெருமை

நாம் வாழுகின்ற இந்தப் பூமியோ மிகவும் பெரியது. மேரு. இமயம் முதலிய மலைகளும், திருக்கயிலை முதலிய சிறந்த மலைகளும் சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சி, காசி, ஆரூர், ஆலவாய் முதலான சிவ சேத்திரங்களும், திருப்பதி, ஸ்ரீரங்கம் முதலிய விஷ்ணு சேத்திரங்களும், பரங்குன்றம், திருச்செந்தூர் முதலான ஆறுபடை வீடுகளும்' கங்கை, யமுனை, சரஸ்வதி, துங்கபத்திரை, நர்மதை, திருவேணி சங்கமம், காவிரி, சேது முதலான புண்ணிய தீர்த்தங்களும் போன்ற மூர்த்திதல தீர்த்த மேன்மைகளும் உடையது.

ஆன்ம ஞானிகளான, சமய குரவர், சந்தான குரவர், ராமகிருட்ணர், விவேகானந்த சுவாமிகள், காமகோடி பீடாதிபதியவர்கள், ரமணரிஷி முதலான உண்மை ஞானிகள் அவதரித்ததும் இங்கேயே.

''வேறுவேறு நின்றுலகெலா மளிப்பது வெஃகியாறுமா முகம் பன்னிரு செங்கைகொண் டருள்வோன்'' என்பர் கச்சியப்ப சிவாச்சாரிய மூர்த்திகள்.

ஆகவே மகத்தாகிய இப் பூவுலகம் விளக்கமுறுமாறு சூரியன் சந்திரர் அக்கினி நட்சத்திரம் முதலான புற ஒளிப்பொருள்களை விளக்கிக்கொண்டிருப்பது, ஒரு திருமுகம்.

அன்பர்கள் துதிக்கவேண்ட அருள்செய்து விரும்பிய வரங்களைக்கொடுத்து மகிழ்வது ஒரு திருமுகம்.
வேதமந்திர விதிவழுவாது அந்தணர் செய்கின்ற யாகம் ஓமம் முதலான நற்கருமங்களைப் புரப்பது ஒரு திருமுகம்,
வேத சிவாகமங்களிலே, மறைந்துகிடந்த உண்மைப் பொருளை அறிஞர்கட்கு விளக்கிக்காட்டி யுபகரிப்பது ஒரு திருமுகம்,
சத் துராதிகளைப் பொருது தேய்த்துப் போர்களவேள்வியைச் செய்வது ஒரு திருமுகம்
வள்ளிநாயகியாரோடு சிரித்து மகிழ்த்து போகலீலையை புரப்பது ஒரு திருமுகம்.

அன்றியும், பக்குவான்மாக்கட்குத் தீக்கைதந்து அருள் செய்வதற்குச் சாதகமாக ஆறு அத்துவாக்களையும் சுத்திசெய்வதும் அறுமுகங்களேயாம்.

அத்தகைய அறுமுகப் பரமன் ஆறுபடைவீடுகளேயன்றி யீண்டும் திருநல்லூர், மாவிட்டபுரம், திருப்பருளைபுரம் என்னும் புண்ணிய சேத்திரங்களிலும் எழுந்தருளி ஆட்சி புரிகின்றான் ஆகவே நமது மேன்மக்கள் வதியும் சுழிபுரத்துப் பருளையம்பதியிலே இப்போது புதிய சித்திரத் தேர்மீது எழுந்தருளிப் 'பக்தர்கட்கு வேண்டும் வரங்களையுதவ எதிர்பார்த்திருக்கின்றான். ஆதலின் எம் அன்னையரிலும் அநேகமடங்கு எம்மை நேசிக்கின்றான். அவனை வணங்கியருள்பெற்று உய்வோமாக'

தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்உற்றால்
தூயவராகி மேலைத்தொல் கதியடைவர் என்கை
ஆயவும்வேண்டும் கொல்லோ அடுசமர் இந்நாட்செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற்றுய்ந்தான்.

சுபம்! சுபம்! சுபம்!

உபாத்யாசிரியர் க. கார்த்திகேசு (யோகி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலஸ்த்தான மூர்த்தியாக முருகன் பக்தர்களுக்கு
அருள்பாலிக்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சித்திரத் தேரில் அற்புதக் கந்தன்

எல்லாம் வல்ல கந்தப் பெருமானைக் கலியுக வரதனென்றும் கார்த்திகேயனென்றும் காங்கேயனென்றும் இன்னும் ஆயிரம் ஆயிரம் நாமங்கள் கூறி அன்பு ததும்ப அழைத்து அழைத்து வழிபடுகிறவர்கள் நாங்கள் அன்பர்களுக்கு மாத்திரமல்ல; அல்லாதவர்களுக்கும் அருள் புரியும் கருணை வள்ளல் எங்கள் முருகப் பெருமான். அவனுடைய திருவடிஞானம் பெற்றதனுல் சூரனும் பெரும்பேறுடைந்தான் என்பது கந்தபுராணம் காட்டும் உண்மையாகும் புலவர்களையும் அடியார்களையும் ஆயிரம் ஆயிரம் ஞானத் தமிழ்ப்பாடல்களையும் பாடவைத்த பெருமானை ஞானந் தானுருவாகிய நாயகன் என்று போற்றுகிறேம், அவனுடைய வேல் ஞானத்தின் சின்னம்; வாகனம் பிரணவசொரூபம்; திருமுகங்கள் ஞான அடக்கம்; அவனுடைய அற்புதமே அற்புதம்

"வாசித்துக் காணெணுதது பூசித்துக் கூடொணுதது
வாய் விட்டுப் பேசொணுதது"

என்ருர் அருணகிரிநாதர் சிவமெல்லாம் எழுதும் தாளாகவும் மரமெல்லாம் பேனுவாகவும் கடலெல்லாம் மையாகவும் எழுதினுலும் அவன் புகழ் எழுதி முடிக்க முடியாதது, என்று குறிப்பிட்டார் ஒரு பெரியார் தன்னுமத்தை யார் யார் இடைவிடாமல் ஜெபித்துக் கொண்டு இருக்கிருர்களோ அவர்களுக் கெல்லாம் வேண்டிய வேண்டிய இகபர சுகங்களை அள்ளி அள்ளிக் கொடுக்கும் மூர்த்தி இவனன்ருே!

"ஒரு கால் முருகா வெனவோ தடியார்
முடிவேல் இணை தாளருள் வோனே"

என்ருர் அருணகிரிநாதர் இத்தகைய பேரருள் பொழியும் திருக்கோலத்தோடு எழுந்தருளிக் கோயில் கொண்டிருக்கும் இடம் பருளை முருக மூர்த்தி கோயிலார்க்கு அவ்வூர் அன்பர்களின் நன்முயற்சியால் உருவாக்கப்பட்ட சிதிரத் தேரின் வெள்ளோட்டம் இன்று நடைபெற விருப்பது பேருவகையைத் தருகிறது. மிகப் பழமையும் அற்புதமும் வாய்ந்த இத்திருக் கோயிலின் முக்கிய ஒரு பணியாகத் தேர்த் திருப்பணி கவனிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அலங்காரம் கந்தனுக்கு சித்திரத் தேர் அமைத்து

எழுதரிய அறுமுகமும் - மணிநுதலும்
வயிடமிடையிட்டுச் சமைந்த
செஞ்சுட்டிக் கலன்களும் - துங்கநீள்பன்
னிருகருணை விழி மலரும்
இவ்ரு பன்னிரு குழையும் ரத்னக்குதம்பையும்
பத்மக் கரங்களும் செம் பொன்னூலும்
மொழி புகழு முடை மணியும்
அறைவடமும் அடியிணையும்
முத்துச் சதங்கையும் சித்ரச் சிகண்டியும்
செங்கை வேலும் முழுதுமழகிய குமரா

என்றென்று பாடிப் பாடி ஆடி ஆடி வடம்பிடித்து இழுத்து எம் பெருமானின் திருவருளுக்கு பாத்திர ராகும பாக்கியத்தை அனைவரும பெற்றுக் கொள்ள ஆவலாக இருக்கிருர்கள். இந்நாள் சைவமக்களின் ஒரு புண்ணிய நாள் ஆகவே இந்நாளை முன்னிட்டு எமது வாழ்த்தையும் திருப்பணிச் சபையார்க்கும் ஏனையோருக்கும் தெரிவித்து பெருமான் திருவடிகளை வணங்கி அமைகின்ருேம்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

25042.3
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

## ஸ்தாபித்த வரலாறு

கந்தபுராண காலத்தில் பறாளாய் ஈசுரவிநாயகர் சந்நிதானத்திலும் புராண படலம் நடைபெற்று வந்தது, சோழமண்டலத்திலிருந்து வந்து சுழிபுரத்தில் குடியேறியவரும், முதலி வேளாளகுலத்தினருமாகிய உறுளி காவல முதலியாரின் புதல்வர் சேதுகாவல முதலியாரும், மருகர் முத்தம்பலவாண முதலியாரும் மிக்க முருக பக்தர்கள். அவர்கள் இருவரும் ஈசுரவிநாயகர் கோவிலுக்கு வடக்கு எல்லையில் இருந்த தங்கள் காணியில் 1768 ஆம் ஆண்டில் ஓர் ஆலயம் அமைத்துக் கந்தவேளின் ஞானசக்தியாகிய வேற்படையைப் பிரதிட்டை செய்து அந்த ஆலயத்திலே கந்தபுராண படனத்தைத் தொடக்கி நடத்தி வந்தார்கள்.

1796 ஆம் ஆண்டு சேதுகாவல முதலியாரின் புத்திரராகிய செங்காரபிள்ளை முதலியார் ஆகமவிதிக்கமைய முருகைக் கல்லினால் அந்த ஆலயம் இருந்த இடத்திற்றானே ஓர் ஆலயம் அமைத்து, அவ்வாலயத்தில் மயூராரூடராய் வள்ளி தேவசேனாபதி சமேதராய் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் திருவுருவத்தைப் பிரதிட்டை செய்து வழிபட்டார். வேதாரணியம் சென்று ஆசாரிய அபிஷேகம் பெற்ற அந்தண உத்தமராகிய சிவஸ்ரீ வேதக்குட்டிக் குருக்களைக் குடும்பத்துடன் அழைத்துவந்து கோவிலயலில் இல்லம் அமைத்து அவர்களைக் குடியிருத்தி முருகப்பெருமானுடைய நித்திய நைமித்திய பூசைகள் விழாக்களை ஒழுங்குற நடப்பித்தார், ஆண்டுதோறும் வைகாசி மாதத்து விசாக நன்னாளில் தேர்விழாவும் அடுத்தநாள் திருவடி நிலக்கரையில் தீர்த்த விழாவும் வரத்தக்கதாகத் திருவிழாக்களை ஒழுங்குசெய்து நடத்துவித்தார். சேதுகாவல முதலியார் கொடியேற்ற விழா, கந்தசட்டி முதல் திருவிழா, திருவெம்பாவை முதல் திருவிழா செய்ய முத்தம்பலவாண முதலியார் தேர்விழாவும் செய்யும் ஏற்பாடு உண்டாயிற்று. சிவஸ்ரீ வேதக்குட்டிக் குருக்களின் பரம்பரையில் உதித்த சிவஸ்ரீ சுப்பையாக் குருக்களும், சிவஸ்ரீ முத்துசாமி ஐயர் அவர்களும் மிக்க பக்தி சிரத்தையுடன் பூசைகள் விழாக்களை நடத்திவந்தனர்.

இவர் வழித்தோன்றலாகிய சிவஸ்ரீ முத்து ஐயாவின் பரம்பரையில் உதித்தவர்கள் சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்களும் சிவஸ்ரீ வேதாரண்ணியேசுரக் குருக்களும் ஆவர், இவர்கள் அனைவரும் கோயில் திருப்பணிகள், பூசைகள், விழாக்களை கிரமமாக நடத்துவதில் பெரிதும் ஈடுபாடுகொண்டு விளங்கினர்,

1827 ஆம் ஆண்டில் சேதுகாவல முதலியாரின் பேரனாகிய மநுநீதி மணியகாரன் அவர்கள் இக் கோவிலின் கர்ப்பக கிருகத்தை வைரக்கல் கொண்டு அமைப்பித்தார். அந்த வருஷத்திலே கும்பாபிஷேகமும் நடைபெற்றது. 1864 ஆம் ஆண்டு சேதுகாவல முதலியாரின் வழியில் வந்தவராகிய வேலாயுதக் கதிரேசர் அவர்கள் ஆறுமுக சுவாமிக்கு மண்டபமும் அமைத்து 1876 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடத்தினார், குறித்த கதிரேசரின் சந்ததியினர் சூரசம்மாரத் திருவிழாவை ஆண்டுதோறும் செய்துவருகின்றனர்.

மாதமும் மாரிபெய்க ஊரெல்லாம் தழைகவே.

நா. அமிர்தலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிபுரம் பறுளாய்

## ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

# புதிய தேர்

சிறப்பு அமைவுகள் பல நிறைந்த இக் கோவிலில் மகோற்சவம் ஆரம்பமான காலம் தொட்டு மிக மிக அழகிய சிற்பத் தேரிலேயே சண்முகப்பெருமான் காட்சி கொடுந்தருள்வார். காலப்பழமையால் அதில் சிறு சிதைவுகள் ஏற்பட்டன. முருகப்பெருமானுக்காக ஒரு அழகிய தேர் அமைக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் 1975ம் ஆண்டு நடந்த கும்பாபிஷேகத்தில் திருவருள் பெருமையைக் கண்டவரும் முருகனைக் குலதெய்வமாகக் கொண்டவருமான மெய்கண்டான் அதிபர் அமரர் இரத்தினசபாபதி அவர்களிடம் தோன்றிற்று. அவரதும் அவர்போன்ற பல அன்பர்களதும் இடைவிடாத முயற்சியால் மிக அழகிய ஒப்பற்ற ஒரு தேர் சண்முகப் பெருமான் பவனி வர 1985 இல் அமைந்தது. நினைப்பவர், கண்டு களி பேருவகை கொண்டவர் யாவர்க்கும் அவன் அருள் பாலிக்கின்றான்.

''பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி''

சு. ஷண்முகரத்ன சர்மா

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்,
பறுளை, சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்திச்சபை பொருளாளரின்

# ஆசியுரை

முருகன் நம்பிக்கையுடன் 20 05-1980 ஆம் ஆண்டு ஆரம்பமாகியஎங்கள்சபையின் பணி ரூபா 11-00உடன் முருகன் பெயரால் முதல்முதல் ஆரம்பமாகியது. இவ்வாரம்பம் ஓரிரு வருடங்களில் ரூ. 8,80,159-31 ஆக உயர்ந்து முருகக் கடவுளின் அருளால் சித்திரத் தேராகவும், தேர் தரிப்பிடமாகவும், முருகனின் தேர் திருவுலாவுவதற்கென செப்பமிடப்பட்ட வீதியாகவும் உருப்பெற்றது. இவையெல்லாம் எம் செயலல்ல, எல்லாம் எம்பெருமானின் செயலே.

"எம் கடன்பணி செய்து கிடப்பதே"

''முருகன் தொண்டன்''

த, கணபதிப்பிள்ளை

அபிவிருத்திச்சபை பொருளாளர்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பெருமை

முருகன் பெருமை அவர்தம் பீரபாவம், அவர்தம் பரத்துவம் என்பன பற்றிச் சங்ககாலப் புலவர்கள் முதல் இன்றைய பக்தர்கள் வரை பலர் போற்றிசைத்துள்ளார்கள். சங்கவிலக்கியங்களான கலித்தொகை, நற்றிணை, திருமுருகாற்றுப்படை முதலாய நூல்கள் அவர் புகழைப் போற்றுகின்றன, வடமொழியில் வியாசபகவான் எழுதியருளிய ஸ்காந்தம் மிகப் பெரியது, அதைக் காஞ்சிபுரத்துக் கச்சியப்ப சிவாச்சாரியரும், கோனேரியப்ப முதலியாரும் தமிழிற் பாடியருளியுள்ளார்கள். கச்சியப்ப சிவாச்சாரியர் செய்தருளிய கந்தபுராணம் சிவபூமியாய இலங்கையின் வடபாகத்தை வாழவைத்தது. எங்கெங்கும் முருகனுக்கு வேற்கோட்டங்கள் மடங்கள் அமைத்துக் கந்தப்ராண படனஞ் செய்துவந்த சிறப்பால் எங்கள் நாகரீகம் கந்தபுராண கலாச்சாரத்தில் முறுக்கேறி முருகபக்தியில் மூச்சாய் வளர்வதாயிற்று.

முருகனுக்குச் செவ்வேள், சுப்பிரமணியர், சிவசுப்பிரமணியர், சண்முகர், ஆறுமுகர், கந்தர் குகன்' காங்கேயன். கார்த்திகேயன், முத்துக்குமரன், பழனியாண்டி, சேனுதி, தேவ சேனுபதி முதலியபலவாய அருட்டிரு நாமங்கள் அர்ச்சனைக்குரியனபோல வழங்குகின்றன. வாழிய முருகே! என நாற்றிணை என்னும்நூல் நயமாக வாழ்த்தும்போது, திருமுருகாற்றுப்படை ஒருமுருகா என்றுள்ளம் குளிர உவந்து வணங்க அவரை ஆற்றுப்படுத்தி வழியமைக்கிறது. அழகு, இளமை, மனம், தெய்வத்தன்மை உடையவர் முருகன். அவர் என்றும் நீங்காத தெய்வத்து இளநயங்காட்டியாட்கொண்டருள்பவர். அவர் தேவர், மாதேவன், தேவ தேவ தேவாதி தெய்வப்பெருமான். ''ஆயிர கோடி காமர் அழகெலாம் திரண்டு ஒன்ருகி மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணந் தன்னில் நூய நல் எழிலுக்காற்ருது என்றிடின் இளையதொல்லோன் மாயிருவடிவுக்கெல்லாம் உவமையார் வகுக்கவல்லார்'' என்று கச்சியப்ப சிவாச்சாரியர் அவர் அழகு பெரிது என்பர். அந்த அழகு 10000000000 மன்மதன்கள் கூடினுலும் இணையில்லாது மாரனைக் குச்சிதம் செய்யும் அழகு பேரழகு.

முதலில் தோன்றிய மலைக்கும் மலைசார்ந்த குறிஞ்சி நிலத்திற்கும் முதல்வன் முருகன், உயர்ந்த இடத்தில் உயர்ந்தவனை பெரியவனை இருத்தி விளையாடவிட்டு ''சேயோன் மேயமை வரை உலகம் என அவர் இருப்புக் கொண்ட இடத்தைப் புகழ்ந்தனர். அவர் புகழ் நன்மொழிப் புலவரன்று. சங்கத்தமிழின் தலைமைப் புலவனுமாம் அவர் செய்யன் சிவந்த அடையன் முருகனின் சிறந்த படைவேல். அவர் வேற்படை வானவன். முக்கட் கடவுளின் ஆலம்போல முருகனுக்கு வாய்த்த படை வேல்.

வேதராக்கியப் பொருளை வலியுறுத்தும் புராணம்போல இதிகாசங்களும் முருகன் பெருமையைக் கூறும். இன்னும் கவியரசர் காளிதாசர் என்பவர் குமார சம்பவம் என்னும் காவியத்தை முருகனின் பெருமை குறித்தே பாடியுள்வார். குமாரக் கடவுளாகிய முருகப் பெருமான் பரத்துவம் கூறும் ஆகமம் குமார தந்திரம் எனப் பெயர் பெற்றது.

கணைக்கந்தன் என்றும் கந்தசாமி என்றும் போற்றி வணங்கும்போது, சங்கமத்தில் சிவன், பூமி, அக்கினி, கங்கை, சரவண வாவி என்னும் ஐந்தும் தாகுதியாக உள்ள நிலை குறிக்கப்பெறுகிறது. முருகன் என்பது கடஸ்தநாமம். அவர் ஓங்காரக் கனல். அவர் பிரணவத்தின் ஒலிவடிவம். வேல், மயில், பாம்பு ஆகிய மூன்றும் முறையே அகரம், மகரம், உகரம் என நிற்ப ஓங்கார மயம் நிலவுகின்றது. கந்தன், வள்ளி, தெய்வநாயகி ஆகிய நிலை சுமுமுனை, இடநாடி, பிங்களநாடி என்பனவாம். கந்தன் தோள் வலியுள்ளவர். பகைவர்களை வற்றச்செய்தவர். அவரை முறையாக வணங்கினுல் பகைவர் வற்றிப்போவார்கள். அவரை வணங்குவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு வரப்பிரசாதமாக வந்து வாய்த்தமை கந்தபுராணம், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தர் கலி வெண்பா முதலியனவாம். கந்து எமக்குப் பற்றுக்கோடு. நாம் பற்றிப்பிடிக்கும் கந்து நம்மை நோவவுரையான், நாம் நோவக் கண்பார்த்திடான். தளரவிடாமல் நம்மைத் தாங்கிச் செல்வான்.

நமக்கு அச்சம் என்னும் அஞ்சுமுகம் தோன்ருமல் ஆறுமுகம் காட்ட வந்தவன் முருகன். ''அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகம் தோன்றும் வெஞ்சமரில் அஞ்சல் என வேல் தோன்றும்''

''அஞ்சுமுகம் தோன்ருமல் ஆறுமுகம் காட்ட வந்த செஞ்சரணச் சேவடியைச் சிந்தை வைப்பதெந்நாளோ''

''ஆட்டும் சமயம் ஆறினுக்கும்
ஆதாரங்கள் ஆறினுக்கும்
அத்துவா ஓர் ஆறினுக்கும்
அமையும் தானே முதல்வன் என்று
தீட்டும் படியாவரும் தெளியத்
தெளிந்தா(கு) ஆறுமுகம் திகழச்
செல்வம் மலியும் இடைக்கழிவாழ்
சேயைப் பிரந்து காக்கவே''

க. சி. குலரத்தினம்
(மில்க்வைற் செய்தி ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

செந்தமிழ் வளர்ச்சியிலும், சிவநெறி ஈடுபாட்டிலும் சிறந்து நிற்பவர்கள் சுழிபுரம் வாழ் இந்துக்கள். பக்தி சிரத்தையுடன் சமயப் பணியாற்றி வரும் அன்பர்கள் அருள்மிகு பறுளாய் முருகனுக்கு புதிய சித்திரத்தேர் ஒன்றை ஆக்கியது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது. இச்சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா நிகழவிருப்பதறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறேன். திருப்பணிகள் செய்வதே பெரும் புண்ணிய மாகும். தேர் நிர்மாணம் ஆழமான தத்துவப் பொருள்களை விளக்கி நிற்கும்.

பிரபஞ்ச சிருஷ்டி அனைத்தும் அடங்கியதாய் முழு உலகமுமே தேரின் வடிவமாக காட்சி அளிக்கும். சுழிபுரம்-பறுளாய் ஸ்ரீ சிவசுப் பிரமணிய ஆலய அபிவிருத்திச் சபையினர் இந்த மலரை வெளியிடு வது நல்லதொரு கைங்கரியம். அருள்மிகு முருகப் பெருமானின் திரு வருள் தமிழர்களின் வாழ்வில் அமைதியையும் மகிழ்வினையும் தோற்று விக்க துணை நிற்கப் பிரார்த்திப்போமாக.

அறுமுகத்திறைவன் வள்ளி தெய்வானை சமேதராய் சித்திரத் தேரில் உலா வருகின்ற வேளையிலே மலர்கின்ற இம்மலர் திருமலராக அப்பெருமான் திருவடிகளிலே சமர்ப்பணமாகுகவென வாழ்த்துகின்றேன்.

து. வைத்திலிங்கம்
உதவி அரசாங்க அதிபர்
சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## பருளை முருகன் புதிய சித்திரத் தேரில் பவனிவரும் காட்சியைக் கண்டு

# நிலையக்குரல் வெளியீட்டாளர் பேரானந்தமடைந்து வாழ்த்துகின்றனர்

சுழிபுரம் — பருளாய் முருகன் அருள் வேண்டி வணங்கும் அடியவர் யாவரையும் அருளாளர்களாக்கும் பெரும் பணியில் சென்ற பத்து ஆண்டுகளாக நிலையக்குரல் செய்து வரும் பணிகளை யாவரும் நன்கு அறிவர்.

பருளை முருகன் தேரில் பவனி வருகின்முர் என்ற தலைப்போடு அறிஞர் பெருமக்கள் எழுதிய கட்டுரை கொண்ட சிறு நூல் ஒன்றை வெளியிட்டு அகில உலகுக்கும் இந்நூலை பரப்பி வைத்தோம். இத ஞல் பல பிரமுகர்களது பாராட்டைப் பெற்றுக்கொண்டோம்.

ஆலய அபிவிருத்திச் சபையார் அழகிய தேர் ஒன்றை உரு வாக்கி வெள்ளோட்ட பவனியும், அழகிய மலர் வெளியீடும் சிறப் பாக நிறைவுபெற முருகன் அருள் பாலிப்பார். இச்செயல்கள் சிறப் படைய நிலையக்குரல் என்றும் சபையாருக்கு பக்கபலமாக இருக்கும். நல்லகாரியம் செய்வோர் யாவருடனும் சேர்ந்து வேலவனை வணங்கி நாமும் எங்கள் பங்கைச் செலுத்துவோம்.

க. வாமதேவன்
ஆசிரியர்
நிலையக்குரல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியுக வரதனும் கந்தனின்
# தேர் உலா

பருளையம்பதி சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. சின்னத்தம்பிப் புலவர் அவர்களால் பள்ளுப் பிரபந்தம் பாடிய வரலாற்றினை உடையது.

அப் பதியின்கண்ணே பன்னெடுங்காலமாகக் கலியுக வரதனும் கந்தன் கோவில் கொண்டருளி யிருக்கின்றான். அடியவர்கள் ஒருகால் நினைக்கின் பலகாலும் தோன்றும் திருமுருகன் பக்தர்களுக்கு அருள் பாலித்து அவர் வேண்டுவனவற்றை யெல்லாம் வேண்டியாங்கு அருள்புரிகின்றான்.

பல வருடங்களாக அழகான நுட்பங்களோடுகூடியதும் இதனை உருவாக்கிய சிற்பி யாரென்று அறியப்படாததுமான அற்புதத் தேரொன்று பருளையம்பதியில் வீதியுலா வந்தது. தற்பொழுது பருளை சிவசுப்பிரமணிய சுவாமி பேரில் அன்புபூண்ட அனைவரும் புதியதொரு சித்திரத் தேரை உருவாக்கியுள்ளனர். அப் புதிய தேரில் முருகன் வீதியுலா வரும் காட்சியை நாமனைவரும் கண்டு பெறுவனயாவும் பெற்றுய்வோமாக.

எல்லாம் வல்ல பெருங் கருணைத் தடங்கடல் நம்மகத்தேயும் புறத்தேயும் உள்ள வினையெல்லாம் போக்கிப் பிறவிப்பயனை நல்கியருள வேண்டுமெனப் பலகாலும் இறைஞ்சுகின்றேன்.

இப் பெரும் பணியில் ஈடுபட்டுழைத்த தேர்த் திருப்பணிச் சபையாரது தொண்டு பெரிதும் பாராட்டுதற்குரியது.

க. அருணசலம் B. A. (Cey.)
அதிபர்
யாழ். விக்டோறியா கல்லூரி,
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29-04-85

# சித்திரத் தேர்மீதேறி வீதி வாரீர்!

ஓங்கார தத்துவமாம் ஞான ரூபன்
உளம் மகிழ அவன்தம்பி வள்ளி காந்தன்
நீங்காத உவகையுந்த, கூத்தே ஆட
நீடுபெரு பக்தர்குழாம் இவரைச் சூழ்ந்து
தாங்காத அன்பு மனக் கோயில் உற்ற
தாமரைப்பொன் ஆசனத்தில் இருத்திப் போற்றி
பாங்காக வீதிவர பருளா யார்க்கு
பார்போற்ற சித்தி த்தேர் சமைத்தார் வாழி!

சுழிபுரம்வாழ் ஐங்கரற்கு உகந்த தேராய்
சுந்தரனும் வேலவர்க்கு உற்ற தேராய்
வழிமரபாம் ஆகமநூல் விதித்த வண்ணம்
வாழையடி வாழையென வந்த தேரில்
விழிகட்கோர் விருந்தாக வேத நூல்கள்
விளங்குபதி னெண்புராண இதிகா சங்கள்
அழிவின்றிக் கூறும் மெய்க் கதைகள் நன்கே
அமைத்திட்டார் சித்திரத்தேர் வல்லார் வாழி!

கயமுகனும் அரக்கனேயும் கொடிய சூரன்
கணக்கில்லாக் கிளேகளேயும் அந்நாள் நீவிர்
நயமுடனே கொன்றழித்துத் தேவர் மீட்டீர்
நற்கருணேத் திறம் அறிந்து நாடி வந்தோம்
பயம் போக்கித் தீயோரை அழித்துக் காப்பீர்
பரம் பொருளே கணபதியே கந்தா போற்றி
செயம் எமக்கே மலர்ந்திடவே இன்பம் சூழ
சித்திரத்தேர் மீதேறி வீதி வாரீர்!

புலவர் கா. வேல்முருகன் B. O. L.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பெருமை

முருகன் வழிபாடு தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றது. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கும் முற்பட்ட தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணம் முருகனைக் குறிஞ்சித் திணைக்குரிய தெய்வம் என்று சிறப்புறக் குறிப்பிடுகின்றது. இவ்வாற்றால் முருகன் வழிபாடு மிகத் தொன்நெடுங்காலம் முதலே நிகழ்ந்து வருதல் தெளியப்படும்.

## முருகன் குறிஞ்சிக் கிழவன் :

தொல்காப்பியனார் நிலத்தை ஐந்து திணைகளாக வகுத்தார். அத்திணைகள் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் பாலை என ஐந்து வகைப்படும் என்றும், முல்லைக்குத் திருமாலும், குறிஞ்சிக்கு முருகனும், மருதத்திற்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும், பாலைக்கு கொற்றவையும் முறையே தெய்வங்களாக விளங்குவர் என்றும் குறிப்பிட்டார்.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

[ மாயோன் - திருமால்; சேயோன் - முருகன்; வேந்தன் - இந்திரன் ]

என்பது தொல்காப்பிய நூற்பா. ஆகவே குறிஞ்சித் திணையாகிய மலையும் மலை சார்ந்த பகுதியும் ஆகிய நிலத்திற்குரிய கடவுள் முருகன் என்பது தமிழ் நூல் மரபு என்பது புலனாகும்.

மலைநிலப் பகுதிகளாகிய குறிச்சித்திணையிலேயே ஆதி மனிதன் தோன்றியிருத்தல் வேண்டுமென்று ஆராய்ச்சி நிபுணர்கள் ஆராய்ந்து கூறுகின்றனர். அவ்வாதி மனித குலத்திற்குரிய தெய்வமாக விளங்கி வருபவன் குறிஞ்சிக் கிழவனாகிய முருகப் பெருமானே யாவன் அதனாலேயே அவனுக்கு நூல்களில் குறிஞ்சிக் கிழவன் என்ற பெயர் வழங்கி வருகின்றது.

முருகனுக்குரிய வெட்சி, கடம்பு முதலிய மலர் மாலைகள் குறிஞ்சி நிலத்துக்குரியனவே. அவனது ஊர்தியும், கொடியுமாகிய மயிலும், கோழியும் குறிஞ்சி நிலத்துக்குரியனவே. அவை மட்டுமன்றி முருகனின் இச்சா சக்தி எனப்படும் வள்ளியம்மை குறிஞ்சித் திணையில் வாழும் குறவர் ஆகிய வேட்குவர் மரபில் உதித்தவளே யாவள் என்னும் வரலாறும் சிந்தித்தற்குரியது. அவ்வாறே முருகனுக்குரிய நிவேதனப் பொருள்களாகிய தேனும் தினை மாவும் குறிஞ்சித் திணைக்குரிய கருப்பொருள் வகையைச் சேர்ந்தனவேயாகும். இவற்றினாலெல்லாம் முருகப்பெருமான் குறிஞ்சிக் கிழவன் என்னும் உண்மை புலனாகும்.

முருகன் அடியார்களுள் தலைசிறந்த ஒருவர் அருணகிரிநாதர். அவர் நம்முருகனுக்குரிய குறிஞ்சிக் கிழவன் என்னும் தொடரை வியந்து போற்றிச் சிந்தித்து இன்புறுகின்றார். புலமை நலம் சிறந்த கவிதை உள்ளத்தால் அப்பெயர் குறித்து நகைச்சுவை தோற்றவும், கற்பனை நலம் பொலியவும் ஓர் அழகிய கருத்தை வெளியிடுகின்றார். ''முருகன் இளமையும், அழகும் உடையவன் ஆயிற்றே. அவனுக்கு குழந்தை வேலன், இளமுருகன் என்னும் பெயர்கள் உண்டு. அவனுக்கு ''சேய்'' என்னும் பெயருமுண்டல்லவா? சின்னஞ்சிறிய குழந்தையை அன்றோ ''சேய்'' என்னும் பெயர் குறிக்கும். சின்னஞ்சிறியவனாகிய குழந்தை வேலனை அறிஞர் உலகம் குறிஞ்சிக் கிழவன் என்று கூறுகிறதே. இது என்ன வியப்பு'' என்னும் கருத்தமைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தப் புவனங்கள் ஈன்ற பொற்பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப்பூந் தொட்டிலேறி அறுவர் கொங்கை
விருப்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவன் என்றேதும்: குவலயமே, என்று

அருணகிரிநாதர் தாம்பாடிய கந்தர் அலங்காரப் பாடல் ஒன்றில் முருகப் பெருமான் குறிஞ்சிக் கிழவன் என்று தொன்று தொட்டுத் தமிழ் மக்களால் போற்றப்பெற்று வரும் கருத்தினையே மறுப்பது போன்று காட்டி வியந்து போற்றி நிலைநிறுத்துகின்றார்.

## தமிழ்க் கடவுள் முருகன் :

முருகன் தமிழ்க் கடவுள். முருகனே தமிழ் மொழியை முதன் முதலில் அகத்தியருக்கு அறிவுறுத்தினான் என்பது வரலாறு. மேலும் சிவபிரானுக்குப் பிரணவப் பொருளை தமிழிலே முருகன் உபதேசித்தான்:

கொன்றைச்சடை யார்க்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழாற் பகவோனே— என்பது அருணகிரிநாதர் திருப்புகழ். "ஆலவாய் அவிர்சடைக் கடவுளுடன் குன்றம் எறிந்த குமரவேளும் சங்கம் இருந்து தமிழ் ஆய்ந்தான்" என்பர் நக்கீரர். "சங்கத் தமிழின் தலைமைப் புலவன்" என்பர் குமர குருபர அடிகள். முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் "தமிழ் கடவுளாகிய முருகன்" அல்லவா ?

## தெறல் அருங்கடவுள் முருகன் :

இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய நூல்களில் பகைவர்கள் கொல்லப்பட்டதாகத்தான் வரலாறுகள் பேசுகின்றன. ஆனால் கந்தபுராணத்தில் முருகவேள் பகைவனாகிய சூரபன்மனை வதைத்து விட்டதாக வரலாறு இல்லை. அவன் மயிலும் சேவலுமாக வாழ்வு பெற்றான்.

தீயவை புரிந்தாரேனும் முருகவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி யடைவர்; என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ? அடுசமர் அந்நாள் செய்த
மாயையின் மகனுமன்றோ? வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்.

— கந்தபுராணம்

சிங்கமுகன் — அம்பிகைக்கு சிம்மவாகனமாகப் போந்தான். தாரகன் — ஐயனாருக்கு யானை வாகனமாகப் போந்தான். ஆகவே கடவுட்டன்மை காத்தலில் உள்ளதேயன்றிக் கொன்றொழிப்பதில் இல்லை. முருகன் அருளே வடிவானவன். தன் அடியவர்கள் செய்யுங் குற்றங்களைப் பொறுத்துக்கொண்டு அவர்களுக்கு அருள் புரிபவன். ஆகவே தண்டிக்கும் தன்மையே இல்லாத சிறந்த கடவுள் என்றும் கருத்தில் தெறல் அருங்கடவுள் என்று அகநானூறு என்னும் சங்க நூல் முருகனைச் சிறப்பித்துக் கூறுகின்றது. முருகனைக் குறித்து எமது முன்னைத் தமிழ்ப்பெரும் சான்றோர்கள் விளக்கியருளிச் செய்துள்ள கருத்துக்கள் நினைத்துணருந்தோறும் அணைத்தெலும்பும் உள்ளுருக ஆனந்தத் தேன் சொரியும் இயல்பினவாக உள்ளன. முருகன் தன் அடியவர்கள் நினைத்தவறறையெல்லாம் நிறைவேற்றி முற்றுவித்துத் தருதலில் சிறந்தவனென்று புறநானூறு கூறுகின்றது.

ஆகவ குன்றுதோறும் எமது குறிஞ்சிக் கிழவோனாகிய செந்தமிழ்த் திருமுருகனின் தெறவருஞ சீரைப் போற்றிப் பரவி வாழ்த்தி வணங்குவோமாக.

"முருகா எனஉனை ஓதும் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார்; வியாதி அடைந்துநையார்;
ஒருகால முந்துன்பம் எய்தார்; பரகதி உற்றிடுவார்;
பொருகாலன் நாடு புகார்; சமராபுரிப் புண்ணியனே."

சி. விஸ்வலிங்கம்

(முன்னை நாள் ஆசிரிய கல்லூரி அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேரை உருவாக்கிய பிரதம சிற்பாசாரியர் ஆ. ஜீவரத்தினம்
அவர்கள் தங்கப் பதக்கம் அணிவித்துக்
கௌரவிக்கப் பெறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் பொழியும்

## அழகன் ஆறுமுகன்

பஞளாய் முருகனின் கீர்த்தியும் மூர்த்தியும் சைவ உலகில் தனி இடம் வகிப்பவை. இத்தலத்தின் ஆறுமுகப் பெருமானுடைய அருள் பொழியும் அழகமைப்பு இந்நாட்டில் மாத்திரமின்றி தென்னாட்டிலும் கூட காணுதற்கரியதோர் அருங் காட்சி. அதற்கேற்ப அப் பெருமானுர் இதுவரை பவனி வந்த தேரும் சிற்பக் கலைக்கே இலக்கணமாய் அமைந்த கலைப் பொக்கிஷம்.

இத் தொல் பெருந் தேரின் அருங்கலை அம்சம் சற்றேனும் குன்ருமல் மேலும் பற்பல சிறப்புக்களை உட்புகுத்திச் சிறந்ததோர் புதிய சித்திரத்தேர் தற்போது உருவாக்கியமை. சந்ததிகள் பல போற்றும் சாதனையாம். திருவருள் துணைநிற்க, அருளாளர் பொருள் வழங்கஅறிவின் மிக்கோர் உரம் ஏற்ற, ஊக்கம் மிக்கோர் உழைப்பினுலும், கவின் கலைஞர் கை வண்ணத்தாலும் ஆனதோர் அற்புதத்தேர் இது,

இப் புதிய தேரின் வெள்ளோட்ட நந்நாளாம் இன்று, இந்த அரிய முயற்சியில் ஈடுபட்டவர்களும், இங்குவந்து இச்சிறப்பினைக் கண்டும். கேட்டும், வணங்கும் வாய்ப்புப் பெற்றவர்களும் அரியவர்கள்; பெரியவர்கள்; அருட்பேறு பெற்றவர்கள்.

ந. கருணை ஆனந்தன்
வருமானவரி-முகாமைத்துவ ஆலோசகர்
அகில இலங்கை சமாதான நீதவான்

செட்டியகுறிச்சி,
01-06-85

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வள்ளிக்கு வாய்த்த மணாளன்"

வள்ளிக்கு வாய்த்த மணாளன் - திரு
வாழும்பருளை நல் வாசன் - அவன்
வடிவேலொடு இருமாதர்கள்
புடைசூழவே மயில்மீதினில்
வருவான் அருள் தருவான் 4

கோலத்தமிழ் முருகேசன் எழில்
கொஞ்சும் அறுமுகநாதன் – அவன்
கலக்கத்தொடு கண்ணீர்மழை
நிலத்தில்விழத் தொழுவாரிடர்
தீர்ப்பான் என்றும் காப்பான் 2

கந்தசஷ்டித் திருநாளில் - குகன்
தந்திரச் சூரனைக் கொன்று – உடன்
சேவல் மயிலாக்கி அவன்
பாவந்தனைப் போக்கி - ஜெயம்
கொண்டான் புகழ்கண்டான் 3

பங்குனி அர்ச்சனைநாளில் - குகன்
பாங்கினைத் தரிசிக்கநேரில் - அவர்
பலநாளிலும் புரிந்தேவரும்
பழிபாவங்கள் பனிபோலவே
பறக்கும் வழி திறக்கும் 4

ஆண்டிற் கொருமுறை கந்தன் – தேரில்
தோன்றும் அழகினைக் காண - வரும்
வைகாசி விசாகந்தனில்
வரும்பேரடி யார்கள் இடை
வருவீர் அருள் பெறுவீர் 5

புண்ணியம் கோடிகள் செய்தோம் - கந்தன்
புதியதேர் பவனியைக்காண - இன்று
பல்லாயிரம் அன்பர்களின்
பணியால் உருவான ரதம்
இழுப்போம் மனம் களிப்போம் 6

நல்லைக்குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுச் சுடர்

எம் வாழ்வில் பருளாய் முருகன் திருவருட் பேற்றின் முனைப்பை அருட் தூண்டுதலே 'பொல்லாவினையேன் புகழுமாறேன்றறியேன்! உணர்ந்துள்ளேன் பலகாலும்; உணர்கிறேன் இன்று. என்னும் அடுத்தவர் அறிய எடுத்துரைக்குமாறறியேன்.

அறிவுச் சுடர் வேலவர் பெருமை 'அறியகிற்பார்' யாருளர்? அருணகிரிநாதர் உளர். அவர் அநுபூதியுண்டு. அறிவின் பெருமையை வள்ளுவரும்

'' வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்துள் உள்ளக் கெடும் ''

என்று வலியுறுத்தியுள்ளார், வேலவர் ஞானமூர்த்தி.

'யாமோதிய கல்வியும் எம்மறிவும்' நாம் தம் உடனுதல் வேண்டித் தந்தவர்—தாமேபெறத் தந்தவர்.

அதனால்,

நாம் அந்த அறிவை வீண் விரையம் செய்ய ஒண்ணாது, உலகில் மயல் கொண்டால் நாம் பெற்ற அறிவும் போய் நாமும் பாழ் வாழ்வு எய்தி விடுவோம்.

நாம் உய்திபெறும் உபாயம் தான் என்ன? நாம் பெற்ற அறிவு வரும் பாதையைப் பற்றவேண்டும். பற்றித் தொடர்ந்து மூலத்தை நாடவேண்டும். மூலம் பிரணவப் பொருள். இதற்கு உபாயம் 'நா மேல்' நடத்தல்-துதி பாடல். மனம் என்னும் கருவி இறை சொருபத்தின் துதி தோத்திரங்களால் நிறைய வேண்டும். பரம் நுழைய இகம் நழுவும், இதற்குச் சிந்தை மகிழப் பாடவேண்டும். முடியுமா? பொருள் உணர்ந்தால் முடியும். பொருளை உணர முடியுமா? முடியும். அறிவு வந்த வழி நாடவேண்டும், மனம் சூழப் பதியவேண்டும். உளம் அகல விரியவேண்டும். புத்தி கூர்ந்து நோக்க வேண்டும். அறிவு, உணர்வு, தெளிவு எங்கிருந்து வந்ததோ அங்கு நோக்கவேண்டும். நோக்கின், 'நோக்கரிய நோக்கு'ப் புலனாகும். இது தான் ஞான மார்க்கம். சிவம் தந்த செய்வழி. பிதா சுதன் மார்க்கம், பாடுவோம்.

'' யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்,
பூமேல் மயல்போய் அறமெய்யுணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே.''

ச. அழகரத்தினம்

பனிப்புலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சரவணபவ

திருக்கோயில்களை அமைத்தல், காத்துப் பரிபாலித்தல் புன
ருத்தானம் செய்தல், மேலும் அவற்றை அபிவிருத்தி செய்தல் மக்
களின் கடமையாம்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது சமய குரவர்
திருவாக்கு. இதற்கமைய சுழிபுரம் பறாளாய் விநாயகன், முருகன்.
திரு அடியார்களினதும், ஏனைய சைவ சமய அபிமானிகளினதும்
பொருள், பணம், சரீர உதவியினால் திருத்தேர் உருப்பெற்றமை
இறைவன் திருஅருளினாலேயே. திருத்தேர் சாஸ்திர முறைப்படி
நம் நாட்டின் புகழ்பெற்ற சிற்பாசிரிகளால் சமைக்கப்பெற்றமை
சந்தோஷத்தைத் தருவன. சித்திரத்தேர், பறாளை விநாயன், பறாளை
முருகன், இதுகாறும பவனிவந்த திருத்தேரின் சிற்ப அமைப்பு
களுடன் அழகாக அமைக்கப்பெற்று பொலிவுடன் விளங்குகின்றது.
கோயில்கள் அவை அமையும் ஊருக்கு பெருமை தருவன. அவையின்
தரம் ஊரின் தன்மையையும் மக்களையும் (மக்களின் ஆற்றலையும்
தன்மையையும்) பிரதிபலிப்பன. ஊரின் வளம், செல்வம், பண்பு
அறிவு, ஆற்றல், புகழ் சிறப்பு, கலை, கலாச்சாரம் யாவும் கோயில்
கள் மூலம் அறியலாம் இவை ஆன்ம ஈடேற்றத்திற்கு உறுதுணை
யாவன. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" மக்கள்
ஒழுங்காகவும் பஞ்சமா பாதகங்களைப் புரியாமலும் சீவர்கள் சகல
கலைகளிலும் முன்னேறுவதற்கும், திருஅடி அடையவும் (முத்தி
அடைய) இவை வழிவகுப்பதுடன், தூண்டுகோலாவும் உழள திருக்
கோயில்களை பொலிவு பெறச் செய்வதிலும், சிறப்பிப்பதிலும் ஈடு
படுவதுடன், பூசைகள், அபிஷேகங்கள், திருவிழாக்கள், யாகங்கள்,
ஏனைய சமாயாசாரீக கிரிகைகள் சைவ ஆகமப்படி ஒழுங்காக
நடத்தி மூர்த்தியின் அருளை பெற்று அன்புடன் ஈடுபட்டு உய்வோ
மாக! திருத்தலங்களை பூசித்து மன நின்மதியும் சாந்தியும் பேரின்ப
மும் பெற எல்லாரும் முயல்வோமாக. இதுவே பிறப்பின் நோக்கம்.
யாழ்பாணத்துச் சின்னத்தம்பிப் புலவர் அவர்கள் பாடிய பறாளை
(முன்பறாளாய்) விநாயகர் பள்ளின் மூலம் பறாளையின் மகிமை விளங்கு
கிறது. இந்த புனித ஸ்தலத்தின் அருகில் குடியமர்ந்த ஐங்கரனின்
தம்பியான் பன்னிரு கரத்தானை நாம் போற்றிப் புகழ்ந்து அவன்
அருளால் உய்வோமாக.

அப்பள்ளின் காப்பு :—

"தொல்லுலகம் போற்றுஞ் சுழிபுரம்வாழ் ஐங்கரன்மேற்
பல்வழுஞ்சேர் பள்ளின் இசைபாடவே—வில்வழங்கு
மையாழிக் கண்ணன் மலர்க்கண்வளர்ந்ததிருக்
கையாழிக் கண்ணனே காப்பு.

திருப்பணிகளில் பங்கு கொள்வது புண்ணியமாம்.

ஓம் சரவணபவ

நா. சிவமுத்துலிங்கம்

சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சுழிபுரம் - பறுளாய்

## ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேர்த்திருப்பணிச் சபை-1975

தலைவர் :

திரு. நா. இரத்தினசபாபதி
(மெய்கண்டான் அதிபர்)

உபதலைவர் :

பிரம்மஸ்ரீ சண்முகரத்தின சர்மா

கௌரவ செயலாளர் :

திரு. ந. சிவசண்முக மூர்த்தி

பொருளாளர் ,

திரு. மயில்வாகனம்

செயற்குழு உறுப்பினர்கள் :

திரு. சி. சிவநேசன்
திரு. முருகவேல்
திரு. காந்தி
திரு. சி. அப்புத்துரை
திரு. க. இரத்தினவேல்
திரு. இ. சிவசிதம்பரம்
திருமதி. இ. தம்பிராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருமுருகன் துணை

"வேலை வணங்கிடுவோம் வேதனை தீர்த்திடுவோம்"

# சுழிபுரம் - பறுளாய்
# ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய அபிவிருந்திச் சபை-1985

**போஷகர்கள்**

திரு. நா. இரத்தினபாபதி
(மெய்கண்டான் அதிபர்)

திரு. தா. சங்கரப்பிள்ளை

**தலைவர்**

திரு. ஆ. இராசபட்சம்

**உபதலைவர்கள்**

திரு. சி, அப்புத்துரை
திரு. நா. அமிர்தலிங்கம்

**கௌரவ செயலாளர்**

திரு. ந, சிவசண்முகமூர்த்தி

**துணைச் செயலாளர்**

திரு. மு. தம்பிஐயா

**பொருளாளர்**

திரு. க. கணபதிப்பிள்ளை

**செயற்குழு உறுப்பினர்கள்**

திரு. க. இரத்தினவேல்
திரு, வே. இராமநாதன்
திரு. ச. கந்தசாமி
திரு. ச. மார்க்கண்டு
திரு. நா. சிவமுத்துலிங்கம்
திரு. நா. சேதுகாவலர்
திரு. க. அம்பலவாணர்
திரு. சி. சிவசிதம்பரம்
திரு. க. மயில்வாகனம்
திரு. வ. இராசதுரை
திரு. வை. ஞானகுரு
திரு. ப. சி. செல்வநாயகம்

திரு. தாமோதரம்பிள்ளை
திரு. இ. முருகேசு
திரு. ச. இராமநாதன்
Dr. க. சிவராசா
திரு, க, கனகசபை
திரு. க. சண்முகம்
திரு. கே. நடராசா
திரு. ச. கந்தையா
திரு. இ. சிதம்பரப்பிள்ளை
திரு. ந. கருணைஆனந்தன்
திரு, க. அருணாசலம்
திருமதி இ. தம்பிராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20-5-80 தொடக்கம் 10-7-85 வரையிலான

## செலவின விபரங்கள்

| கால எல்லை | தேர் | தேர் மடுவம் | தேர் வீதி | உபகரணதிகள் | தொகை |
|---|---|---|---|---|---|
| 20-05-80 – 10-06-82 | 148814 34 | —— | —— | —— | 148814 34 |
| 11-06-82 – 30-09-84 | 288313 70 | 47144 00 | 67720 00 | 1680 00 (சிறிய ஒலிபெருக்கி) | 404857 70 |
| 01-10-84 – 10-07-85 | 227917 30 | 25734 35 | —— | 390 00 (விளம்பரப்பலகை) | 254041 65 |
| | 665045 34 | 72878 35 | 67720 00 | 2070 00 | 807713 69 |

## பெறப்பட்ட நன்கொடைகளின் விபரங்கள்

| | |
|---|---|
| உள்ளூர் முற்பணங்கள் | 26516 17 * |
| உள்ளூர் வரவுகள் | 451175 45 |
| மலேசியா சிங்கப்பூர் | 235383 84 |
| லண்டன் | 12961 95 |
| மேற்கு ஜேர்மனி | 58613 80 |
| பிரான்ஸ் | 16508 00 |
| மத்திய கிழக்கு நாடுகள் | 7000 00 |
| | 808159 81 |

250273
UNIVERSITY OF JAFFNA LIBRARY
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org